சிறப்பு மாவட்ட நீதிமன்றம், ஈரோடு
(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்)
வழக்கு எண். MCOP. No.64/2023

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ஆம் தேதி ம.சா.1 வாக்குமூலம் உறுதிமொழிச்சட்டம் 44/1969 பிரிவு 4 ஏற்பாட்டின் படி திரு. S. சக்திவேல், முதல்நிலை உதவியாளர், சிறப்பு மாவட்ட நீதிமன்றம், ஈரோடு என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரேவதி | கிராமம் | : |
| த/பெ | : | மாவட்டம் | : |
| வயது | : | தொழில் | : |

<u>அனுமதியுடன் முதல் விசாரணை தொடர்ச்சி</u> :

என் தாயாரின் சம்பளச்சான்று அசல் ம.த.சா.ஆ.8 ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது.

<u>2 மற்றும் 3 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:

விபத்தில் இறந்து போன நபர் என் தாயார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்தின்போது என் தாயார் இரு சக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து சென்றார். அவர் சென்ற வண்டி என் அண்ணன் சிவாசலபதிக்கு சொந்தமானது. அந்த வண்டி மீது வேறு எந்த வண்டியும் மோதவில்லை என்றால் சரிதான். அந்த வண்டி மரத்தில் மோதியதால் என் அம்மா வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டார். அந்த வண்டி மரத்தின் மீது மோதவில்லை என்றும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED170010792022/truecopy/order-2.pdf